பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்...

IIகொரி 5:17

2019

மார்ச் மாத

செய்தி மலர்

இதழ் : 11

மலர் : 15



# சபை ஊழியரின் அன்பு மடல்



## மறுரூபமாகுங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த பிப்ரவரி மாதம் முழுவதும் நம்மை கண்மனி போல வழிநடத்தின தேவன் வரும் மார்ச் மாதத்திலும் நம் கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களாலும் திருப்திபடுத்தி வழி நடத்துவாராக!

மார்ச் மாதம் 6-ம் தேதி முதல் லெந்து நாட்கள் ஆரம்பமாகிறது. லெந்து என்றாலே உபவாசம் என்று பொருள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனது 30-வது வயதில் ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு வனாந்திரத்திற்கு சென்று உபவாசித்து ஜெபித்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அளவில்லாமல் பெற்றுக்கொண்டு தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்ட 40 நாட்களை நாமும் உபவாச நாட்களாக அனுசரிக்கிறோம். நாமும் அதிகமதிகமாக ஜெபித்து வேதம் வாசித்து தியானித்து ஆவிக்குரிய வாழ்வில் ஒரு படி முன்னேற இந்த நாட்களை பயன்படுத்திக்கொள்வோம்.

வேதம் கூறுகிறது ரோமர்-12:2-ல் நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்

## வண்ணத்துப்பூச்சியை போல…….

வண்ணத்துப்பூச்சியை ரசிக்காதவர்கள் யாருமிருக்கமாட்டார்கள். அழகிய வண்ண சிறகுகளோடு அங்குமிங்கும் பறக்கும் அதின் அழகே அழகு. ஆனால் அதன் முந்தின தன்மையாகிய புழுவை நினைக்கும்பொழுது நாம் அருவருக்கிறோம். ஆம் அவலட்சணமான அந்தப்புழு தன்னை சுற்றிலும் ஒரு கூட்டை உண்டு பண்ணி 40 நாட்கள் அதற்குள் கடுந்தவம் இருக்கிறது. 41-வது நாள் அந்தக்கூட்டை உடைத்து வெளிவரும்பொழுது நாம் காணுகின்ற அழகிய வண்ணத்துப்பூச்சியாக சிறகடித்து பறக்கிறது. ஆண்டவருடைய படைப்பு எத்தனை ஆச்சரியம். நம்மையும் கூட அதேவிதமாக உருமாற்றம் செய்ய ஆண்டவர் இயேசு கிறிஸ்து விரும்புகிறார். இந்த 40 நாட்களும் ஆண்டவரோடு அனுதினமும் சஞ்சரிப்போம். அழகிய உருமாற்றத்தை நம் உள்ளங்களில் நாம் பெற்றுக்கொள்வோம்.

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதியதாயின. (2-கொரி-5:17)

பழைய பாவங்கள் கெட்ட செய்கைகள் யாவையும் இந்த 40 நாட்களில் அழித்தொழித்து விட்டு புதியதாய் பிறந்த குழந்தைகளைப் போல மறுரூபமடைவோம். "இரவு சென்று போயிற்று பகல் சமீபமாயிற்று ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு ஒளியின் ஆயுதங்களை தரித்துக கொள்ளக்கடவோம். களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காம விகாரமும், வாக்கு வாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல் பகலிலே நடக்கிறவர்கள் போல சீராய் நடக்க கடவோம். துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமல் இருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக்கொள்ளுங்கள்" (ரோம-13:12-14)

## துளிர்விடும் காலம் போல்.......

மார்ச் ஏப்ரல் மாதம் 40 நாட்கள் மரங்களுடைய இலையுதிர் காலமாகும். இந்த நாட்களில் மரங்களிலுள்ள இலைகலெல்லாம் காய்ந்து சருகாகி உதிர்ந்து போய் மரங்கள் பார்ப்பதற்கு அவலட்சணமாக காட்சியளிக்கும். இது ஒரு நம்பிக்கையற்ற தன்மையை குறிக்கிறது. இந்த மரங்கலெல்லாம் வாழ்வு பெறுமா? என பார்ப்பவர்களை எண்ணத் தூண்டுகிறது. ஆனால் 41-வது நாள் இம்மரங்களில் புதிய துளிர்கள் தோன்ற ஆரம்பிக்கிறது. எத்தனை ஆச்சரியம் பாருங்கள். இதைத்தான் வசந்த காலம் என குறிப்பிடுகிறோம். பழைய இலைகளை களைந்து புதிய இலைகளை தோற்றுவிக்கிற காலந்தான் வசந்த காலம். என் அன்பு சகோதர சகோதரிகளே நாமும் கூட இந்த 40 நாட்களில் களைய வேண்டிய பழைய தீய குணங்களை களைந்து விட்டு இயேசுவுக்குள் வேரூன்றி இலை செழித்து கிளை வளர்ந்து கனி கொடுப்போமாக!

விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மாக்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலிய பழைய இலைகளையெல்லாம் இந்த 40 நாட்களில் நாம் களைந்து போடுவோம். காரணம் இப்படிப் பட்டவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பது இல்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

41-ம் நாள் துளிர் விடும் காலத்திலே அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய புதிய இலைகளை நாம் தரித்துக்கொள்வோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் ஒருவரையொருவர் கோபமூட்டாமலும் ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம். அல்லேலூயா! (கலா-5:19-26)

## கழுகைப் போல...

கழுகு ஒரு விசித்திரமான பறவை யோபுவைப் பார்த்து கடவுள் சொல்கிறார் "கழுகு கன்மலையிலும், கன்மலையின் சிகரத்திலும் அரணான ஸ்தலத்திலும் தங்கி வாசம் பண்ணும். அங்கேயிருந்து இறையை நோக்கும். அதின் கண்கள் தூரத்திலிருந்து அதை பார்க்கும் அதன் குஞ்சுகள் இரத்தத்தை உறிஞ்சும்" என்று (யோபு–39:27–30)

இப்படிப் பட்ட கழுகு தனது 40–வது வயதிலே முதுமையடைந்து இறகுகள் எல்லாம் உதிர்ந்து போய் தன்னுடைய கூர்மையான அலகை உடைத்து விட்டு கன்மலைப் பாறையின் மேல் 40 நாட்கள் அமர்ந்து கொள்ளும். இந்த நாட்களில் கழுகை பார்க்கும் பொழுது வெறும் தோல் மட்டுமே தெரியும். அது இறந்து விடும் என்று எல்லோரும் நினைப்பார்கள். ஆனால் இந்தக் கடுமையான தவ நாட்களில் என்ன நடக்கும் தெரியுமா? கொஞ்சம் கொஞ்சமாக அதனுடைய சிறகுகள் முளைக்கத் தொடங்கும். புதிய அலகு வளரும், புதிய நகங்கள் உருவாகும். இழந்த பெலனை தன் சரீரத்திலே பெற்றுக்கொள்ளும்.

41–ம் நாள் புதிய பொலிவோடு புதிய பலத்தோடு தனது பெரிய சிறகை சடசடவென அடித்து அப்படியே உயற எழும்பும் அல்லேலூயா! அதே போல இந்த 40 நாட்களும் கர்த்தருடைய பாதத்தில் காத்திருந்து தங்களை சுத்திகரித்துக்கொண்டு பழைய சுபாவங்கள் மாறி பரிசுத்தமடைந்தவர்கள் இந்த கழுகைப் போல செட்டைகளை அடித்து எழும்பி புதிய வாழ்வை சுதந்தரித்துக்கொள்வார்கள். வேதம் கூறுகிறது "சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தை பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள், வாலிபரும் இடறி விழுவார்கள். கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புது பெலன் அடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்" (ஏசாயா–40:29–31)

பிரியமானவர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மிடத்தில் அன்பு கூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மை கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. (வெளி–1:6)

இந்த லெந்து நாட்களின் முடிவிலே ஆண்டவர் நமக்கு கொடுக்கிற மகிமையான மறுரூபம் எவ்வளவு ஆச்சரியமானது பாருங்கள். இந்த உலகத்திலும் நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கி இந்த உலக வாழ்விற்கு பிறகும் கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்வார். அல்லேலூயா! "அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும்,

மாம்ச இச்சைகளினாலும் மரித்தவர்களாய் இருந்த நம்மை தமது மிகுந்த அன்பினாலே கிறிஸ்துவுடனே கூட உயிரடையச் செய்வார். கிருபையினாலே இரட்சிக்கப்படுவோம். இது நம்மால் உண்டாகப் போகிற காரியம் அல்ல. இது தேவனுடைய ஈவு" (எபேசி–2:1–8)

பிரியமானவர்களே! லெந்து நாட்களிலே திக்கற்றபிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரித்து, தான தருமங்களை செய்து, ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரம் இல்லாமலும் இருக்கும் போது அதை அவர்களுக்கு கொடுத்து நற்கிரியைகளினாலே ஆண்டவரை வெளிப்படுத்துவோம். (யாக்–2:14–18) நம் நாவினால் ஒருவரும் சபியாமலும் வைராக்கியம் பாராட்டமலும், கலகம் செய்யாமலும். ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாமலும், கிருபையான வார்த்தைகளை பேசி ஆண்டவரை துதித்து ஒவ்வொரு நாளும் வேத வசனங்களை தியானம் செய்வோமாக!

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து அர்த்தமுள்ள லெந்து நாட்களை அனுசரித்து நம்முடைய வாழ்க்கையை பிரயோஜனப்படுத்திக்கொள்ள உதவி செய்வாராக!

"இப்பொழுதே உபவசாத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல உங்கள் இருதயங்களை கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள். அவர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் தீங்குக்கு மனஸ்தாப்படுகிறவுமாயிருக்கிறார். சீயோனிலே எக்காளம் ஊதுங்கள் பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள். விசேஷித்த ஆசாரிப்பைக் கூறுங்கள். ஜனத்தைக் கூட்டுங்கள் சபையை பரிசுத்தப்படுத்துங்கள். முதியோரை சேருங்கள், பிள்ளைகளையும், பாலுன்கின்ற குழந்தைகளையும் கூட்டுங்கள். மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டு புறப்படுவார்களாக! அப்பொழுது கர்த்தர் தமது தேசத்திற்காக வைராக்கியம் கொண்டு தமது ஜனத்தை கடாட்சிப்பார். தேசமே பயப்படாதே மகிழ்ந்து களிகூறு கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்" (யோவேல்–2:12–21)

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக,

ஜெபம் என்னும் எண்ணெய் ஊற்றப்படும்போது குடும்ப விளக்கில் ஆசீர்வாத வெளிச்சம் பிரகாசமாய் மிளிரும்

இது ஓர் போராட்ட களம் இந்த போராட்ட களத்தில் போராடித்தான் தேவனையும் மனிதனையும் மேற்கொண்டான் யாக்கோபு

கர்த்தரின் பணியில்,

அன்பு சகோதரன்

**சகோ. ஸ்டாலின்**

# கிறிஸ்தவமே தானதர்மம்தான்

**கிறிஸ்தவமே தானதர்மம்தான்: –**

இது போன்றதொரு கூற்றை 25 ஆண்டுகட்டுகு முன்னர் நான் கேட்டிருந்தால் இது ஒரு துர் உபதேசம் என்று கடுமையாய் எதிர்திருப்பேன் ஆனால் அடுத்தடுத்து என் கண்களில் கடவுளின் தொடுதலை பெற்று வருவதால் இக்கூற்று முழுக்க முழுக்க வேதத்தின்படியானதே என உணர துவங்கியுள்ளேன். என்னை தவறாய் புரிந்துகொள்ள வேண்டாம். "தானதர்மமே கிறிஸ்தவம்" என்று நான் சொல்லவில்லை "கிறிஸ்தவமே தானதர்மம்" என்றுதான் சொல்லுகிறேன்

தனது நிரூபத்தில் அப்போஸ்தலன் யோவான் எழுதியதின் அடிப்படையில் (1 யோ 4:7–21)ஜெரமி டெய்லர் எனும் பக்தன்"கடவுள்தாமே அன்பாய் இருக்கிறார்: எனவே நமக்குள் குடி கொண்டிருக்கும் தானதர்ம உணர்வு ஒவ்வொன்றிற்கும் தெய்வீக சுபாவத்தில் நமது பங்கேற்பாகும்" என்றார். அதே பாணியில் லேட்டிமர் என்ற வேதபண்டிதர் "கிறிஸ்துவின் இதய துடிப்பே தானதர்மம்தான்" என்றார். புனிதமான பக்திக்கு அப்போஸ்தலன் யாக்கோபு தரும் வரையறை இதோ "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும்படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதும்.(யாக் 1:27) மட்டுமல்ல தானதர்ம செயல்களில்லாத விசுவாசம் செத்தது என்றும் அவர் வாதாடினார் (யாக் 2:14–20) தமது மக்களிடம் ஆண்டவர் அடிப்படையாக எதிர்பார்ப்பது "இரக்கம் கொள்வதில் நாட்டமே" என்று பின்வாங்கி போன இஸ்ரவேல் மக்களுக்கு தீர்க்கன் மீகா நினைப்பூட்டினார் (மீகா 6:8) விசுவாசம் ,நம்பிக்கை, அன்பு ஆகிய 3ம் பிரதான குண நலன்களில் அன்பே பெரியதாம் (1 கொரி 13:13)

இன்றைய சராசரி கிறிஸ்தவன் எவனுக்கும் ஆன்மீக பயிற்சிகளை குறித்து போதுமானதற்கு மேல் பேதனை கிடைக்கிறது. ஆனால் அவனது சமூக கடமைகளை குறித்து அவன் சவால் பெறுவதில்லை. ஆன்மீக பயிற்ச்சிகளும் சமூக கடமைகளும் சரிசமமான முக்கியத்துவம் வாய்ந்தவை. கடவுளை முழு இருதயத்தோடு நேசிக்க வேண்டுமென்று முதலும் பெரிதுமான கட்டளையை போலவே நமது அயலாகத்தாரை நேசிக்க வேண்டுமென்ற கட்டளையும் முக்கியமானது(மத் 22:37–39) நமது அயலான் யார் என்பதை விளக்க இயேசு நல்ல சமாரியன் கதையை சொன்னார்.(லூக்கா 10:29–37) நமது அயலானை நேசிக்க வேண்டும் என்பது " இரண்டாம்" கட்டளையாய் சொல்லபட்டிருக்கிறது என்பதால் அது முக்கியத்துவத்தில் "இரண்டாந்தரமானதாய்" ஆகிவிடாது. திருசட்டம் மற்றும் தீர்க்கதரிசனம் முழுமையும் இவ்விரு கட்டளைக்குள்ளேயே அடங்கியிருக்கின்றனவென்று இயேசு கூறியபோது, ஒன்றில்லாது அடுத்ததில்லை என்றும் ஒன்றை புறக்கணித்தால் நாம் சமநிலை இழந்துவிடுவோம் என்றும் நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்றே அவர் எதிர்பார்த்தார் (மத் 22:40) நாணயத்தின் மறுபக்கத்தைப் பார்க்க தவறுவதே கிறிஸ்துவத்தின் வலிமைக்குறைவுக்கு முதற்காரணம்.

கிறிஸ்தவ வாழ்வு மற்றும் பணியின் அடிப்படையான ஏழு ஆன்மீக பயிற்ச்சிகளை தானதர்மத்தோடு அவை எப்படி சம்மந்தபட்டவை என ஆராய்ந்து பார்ப்போம்.

## 1. மனம்திரும்புதலும் தானதர்மமும்

மனம்திரும்புதல்தான் கிறிஸ்துவின் மூலவுபதேசங்களில் முதலானதாகையால் அதில் துவங்குவோம் (எபி 6:1) திரு முழுக்கினன் யோவானை மனந்திரும்புதல் பிரசங்கியாக புதிய ஏற்பாட்டின் ஆரம்ப பக்கங்கள் அறிமுகபடுத்துகின்றன. "மனந்திரும்புதலுக்கேற்ற கனியை கொடுங்கள்" (அதாக்கிய அவரது உடனடி பதில் "இரண்டு ஆடைகளை உடையவன் இல்லாதவனுக்கு கொடுக்கட்டும்: ஆகாரம் உடையவனும் அப்படியே செய்யட்டும்!(லூக்கா 3:8-1)ஒப்புகொடுத்தலுக்கான அழைப்பிறபவர்களுக்கு இன்றைய சுவிசேஷகர் எவரும் இப்படி பதில் கொடுப்பாரா? உடையில்லாதோரை உடுத்திவிக்கவும் உணவில்லாதோருக்கு உணவளிக்கவும் நமது சுவிசேஷ செய்திகளில் அழைப்பே கிடையாது. மனதிரும்புதலென்றாலே சினிமா சிகரெட், குடி இப்படிபட்டவைகளை விட்டு விடுவதென்றே மக்கள் புரிந்திருக்கிறார்கள் தற்பரிசோதனை கேள்விபட்டியல்களிலும் தானதர்மத்தைப் பற்றி பேச்சில்லை. செய்ய தகாதவைகள் எனும் பாவங்களை அளவிற்கு மீறி கண்டனம்பண்ணி, செய்ய தவறியவைகள் எனும் பாவங்களை அறவே கவனியாது விட்டுவிட்டோம். ஆனால் ஆங்கிலிகன் திருச்சபையின் ஜெப புத்தகங்களிலுள்ள பொதுவான பாவ அறிக்கையில் செய்ய தவறியவைகளெனனும் பாவங்களே முதலாவது குறிப்பிடபட்டுள்ளன. "செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்ய தகாதவைகளை செய்து வந்தோம்."

யுகங்களின் அடிப்படையில் யோவான் ஸ்நானனின் உபதேசம் நமக்குறியதல்லவென்று அதை தள்ளி விட முடியாது, "யோவான் வரைக்கும்" பழைய உடன்படிக்கையின் சத்தம் ஒலித்தது. புதிய உடன் படிக்கை கிறிஸ்துவின் மரணத்திற்கு பின் அமுலுக்கு வந்தது. (மத் 11:31:26:28). எனவே யோவான் இரு உடன்படிக்கைகளுக்கும் ஓர் இணைப்புபோல் இரு உடன்படிக்கைகளுக்கும் இடைகால தீர்க்கதரிசியாய் செயல்பட்டார். தானதர்மத்திற்கான அழைப்பை மனந்திரும்புதலின் செய்தியிலிருந்து எக்காலத்திலும் பிரிக்கமுடியாதென்பதற்கு இதோ சில எடுத்துக் காட்டுகள்.

யோபுவை போல நீதிமான் மண்ணுலகில் ஒருவனுமில்லையென கடவுள் அவரைகுறித்து சாட்சியிட்டார் (யோபு 1:8) தனது வாழ்வில் நீதி நெறியைச் செயலாற்றிய விதத்தை அவர் இவ்விதம் விளக்குகிறார். "நீதியை அணிந்தேன்அது என்ன ஆடையாயிற்று: நியாயம் எனக்கு மேலாடையும் பாகையும் ஆயிற்று, கதறிய ஏழையையும், அனாதை பிள்ளைகளையும், உதவியற்றவனையும், காப்பாற்றினேன், விதவையின் உள்ளத்தை களிப்பாய் பாடச்செய்தேன்,நான் குருடனுக்கு கண்ணும் சப்பாணிக்கு காலுமாயிருந்தேன் ஏழைகளுக்கு நான் தந்தையாக இருந்தேன், அறிமுகமற்றோரின் வழக்குகளுக்காக வாதிட்டேன் கொடியவரின் பற்களை உடைத்தேன் அவர்களின் பற்களுக்கு இரையானவரை விடுவித்தேன் (யோபு 29:12-17)

மன்னன் நேபுகாத் நேச்சாருக்கு வரவிருந்த அழிவை குறித்து சொப்பனத்தை அவருக்கு விளங்க சொன்ன பின்னர் தானியேல் அவரை பார்த்து "அரசரே நான் சொல்லும் ஆலோசனையை நீர் ஏற்றுக் கொண்டு நீதியை செய்து உமது பாவங்களையும் ஒடுக்கப்பட்டோருக்கும் இரக்கம் காட்டி உமது அக்கிரமங்களையும் போக்கி கொள்ளும் என்றார்.(தானி 4:27)மனந்திரும்புதலின் முக்கிய அம்சமாக தான தர்மத்தை தீர்க்கதரிசி மன்னருக்கு சுட்டி காட்டியது ஆச்சரியமாயில்லையா? அரசரின் வாழ்க்கை பாணியின் அடிப்படை கோளாற்றைச் தீர்க்கதரிசி தீர்க்கமாய் தெளிவுபடுத்தினார்.

வியயாதி என்னவென்று கண்டுபிடிப்பதே மருத்துவ பணியில் முதற்படியாகும். மருத்துவரான லூக்கா தனது தொழிலறிவுக்கேற்ப்ப இரு அதிகாரிகளின் வாழ்க்கையின் அவல நிலைக்கு வேரான காரணத்தை தனது சுவிசேஷத்தில் அழகாய் எடுத்துறைக்கிறார். ஒருவர் செல்வம் படைத்திருந்த இளம் வழக்கறிஞ்சர். தனது சிறுவயதில் முதல் திருசட்டங்கள் யாவற்றையும் தான் கடைபிடித்து வந்ததாக அவர் பெருமையடித்து கொண்ட போது இயேசு அவரை பார்த்து " இன்னும் உம்மிடம் ஒரு குறையுண்டு உமக்குள்ள யாவற்றயையும் விற்றுத் தரித்திரருக்கு கொடும் . பின்பு என்னை பின்பற்றி வாரும் என்றார்.(லூக் 18:18-22) அவர் மிகவும் துக்கமடைந்தார், ஏனெனில் அவர் "மிகுந்த" செல்வம் உடையவறாயிருந்தார் (வசனம் 23) அடுத்த அத்தியாயத்திலேயே சகேயுவை லூக்கா அறிமுகபடுத்துகிறார், "ஆண்டவரே என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்து விடுகிறேன்" என்று அவர் இயேசுவிடம் சொன்ன பொழுதுதான் அவர் அவரிடம் "இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது" என்று சொல்லி அவரை ஆசீர்வதித்தார் (லூக் 19:8,9)

## 2. ஜெபமும் தானமும்

ஜெபங்கள் பதிலளிக்கபடாததற்கு காரணங்களை கூறும் போது ஏசாயா 1:15ஐக் குறிப்பிட நாம் தவறியதில்லை. " நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன், நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன். உங்கள் கைகள் இரத்த கறையால் நிறைந்திருக்கின்றன. இதையடுத்து நமது பாவங்களை கடுஞ்சிவப்பாயிருந்தாலும் கடவுள் அவற்றை மன்னிக்க அருளியுள்ள வாக்குதத்தம் சொல்லப்பட்டுள்ள 18ஆம் வசனத்திற்கு சென்று விடுவோம், 15 ஆம் வசனத்தை வாசித்துவிட்டு கடவுளின் முகத்தை மறைக்கும் நமது பாவங்கள் பட்டியலிபட்டுள்ள 16ஆம் 17ஆம் வசனங்களை கவனியாது 18ஆம் வசனத்திற்கு தாவி விடுவதே நமது தவறு தமது மக்களின் துர்செயல்களை சுட்டிகாட்டிய பின்னர் கடவுள் அவர்களை "நம்மை செய்ய படியுங்கள், நியாயத்தை தேடுங்கள், ஒடுக்கபட்டவனை ஆதரித்து திக்கற்றபிள்ளையின் நியாயத்தையும் விதவையின் வழக்கையும் விசாரியுங்கள் என்று கூவியழைத்தார். ஜெப கூட்ங்களும் ஜெப முகாம்களும் பெருகி வருவதைகுறித்து நாம் மகிழ்ந்தாலும் தான தர்மத்தை குறித்தும் பேச்சு இல்லையே என்பது நம்மை மனமடிவாக்க வேண்டும். மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் "கொஞ்சமாய்தான்" பதில் பெறுகிறோம். ஏழைக்காய் போராடி அவர்களுக்கு நீதி

நியாயம் கிடைக்க உழைப்பதே இந்நிலைக்கு பரிகாரமாகலாம் வினோதமாய் தெரிகிறதோ? அதேதான் வேதம்!

மலை பிரசங்கத்திற்கு நிகரில்லை, அதின் சாரம்சம் மட்டுமல்ல, பிரசங்க மன்னராகிய நமதாண்டவர் சத்தியங்களை குறிப்பிட்டுள்ள வரிசை கிரமமும் நமது கவனத்திற்குறியது. ஆன்மீக பயிற்சிகளின் துர்பிரயோகங்களைக் கண்டித்துக் கொண்டிருக்கையில் கர்த்தர் இயேசு முதலாவதாக தானதர்மத்தையும் அதற்குபின்னரே ஜெபத்தையும். உபவாசத்தையும் குறித்து, பேசுகிறார்.(மத் 6:1-4,5-8)இதற்கு காரணமில்லாமலில்லை ஜெபமென்பது விண்ணகத்தந்தை நோக்கிய பாசமொழியாகுமானால், தானதர்மமென்பது மண்ணுலகத்தின் தர்திரரை நோக்கிய பரிவு மொழியாகும். கண்கண்ட சகோதரனிடம் அன்பு செலுத்தாதவன் கண்காணாத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்துவான்(1 யோவான் 4:20) வேதம் கூறும் கடவுள் ஏழைகளின் தேவன் (நீதி 14:31) இறைவனின் இதயத்தை உடைப்பது நமது இதயத்தையும் உடைக்காவிடில் அவரது இதய பாரத்தை நாம் ஜெபத்தில் பகிர்ந்து கொள்ள முடியாது.

விதவையின் வீடுகளை விழுங்கி நீண்ட ஜெபம் பண்ணுவதாய் நடித்த அக்காலத்து பரிசேயரை இயேசு கடுமையாய் கண்டனம் பண்ணினார் (மத் 23:14)இன்றும் நிலைமை அதுதான். அநேகமாக காணிக்கையிலேயே கவனங்கொண்டு அநேக விதவைகளுக்காகவும் உதவியற்றோருக்காகவும் அநேக ஜெபங்களை பண்ணும் பிரசங்கிமார் அநேகர்.

தானதர்மமானது நமது ஜெபங்களை எவ்விதம் கடவுளுக்கு முன் சுகந்த வாசனையாக்குகிறதென்பதை கொர்நெலியோவின் சரிதை அழகாய் சித்தரிக்கிறது. அவன் புறிவினதாரிலேயே முதல் விசுவாசி என்பது மட்டுமல்ல, அப்போஸ்தலர்கள் அவருக்காக ஜெபிக்கவோ அவர் மீது கைகளை வைப்பதற்காகவோ முன்னர் பரிசுத்த ஆவியை பெற்றவருங்கூட (அப் 10:44) அவரை குறித்து மக்களுக்கு மிகுந்த தருமங்களை செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிகொண்டிருந்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது வசனம் 2ல் விண்ணுலகிலிருந்து அவருக்கு தூதன் கொண்டு வந்த செய்தியாவது "உம் ஜெபங்களும் உம் தருமங்களும் கடவுளுக்கு நினைபூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கின்றன"(வசனம் 4)

ஓர் இக்கட்டான சூழல் உருவாகி, உங்கள் ஜெபங்கள் கேட்கபடாத நிலையிருக்குமானால், உடனே ஒவ்வொரு ஊழியராய் தரிசனம் காணச் செல்லுவதை நிறுத்தி, நீங்கள் புறப்பட்டுபோய் ஓர் ஏழை, ஓர் விதவை. ஓர் அனாதை, அல்லது ஒதுக்கப்பட்டு கைவிடபட்டவர் ஒருவருக்கு உதவி செய்யுங்கள். நீங்கள் எதிர்பார்க்கிறதற்கும் முன்னதாக உங்கள் ஜெபங்களுக்குப் பரத்திலிருந்து பதில் வந்துவிடும்.( இது சுவிசேஷகர் சகோதரர் சு ஸ்டான்லி அவர்கள் Blessing என்ற பத்திரிக்கையின் செய்தி, 7 பாகங்களை கொண்டது, இரண்டு பாகமே இதில் இந்த இதழில் இருக்கிறது அடுத்த இதழில் மற்றுள்ள பாகங்கள் தொடரும்.

(நன்றி Blessing Magazine)

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. கிருபா கலிய மூர்த்தி
செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
செல்வி. திவ்யா அருள்மணி
செல்வி. நிகிட்டா அருண் இம்மானுவேல்
செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்
செல்வி. ஜெஸ்வின் ஆ. யேசுதாஸ்
செல்வி. அபியா செல்வி தர்மர்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்

செல்வன். ஷெரிடன் சைமன் பால்ராஜ்
செல்வன். ஜேடன் பால் கிரண்குமார்
செல்வன். டியான் பென்ஸம் சைமன்
செல்வன். ஜோயல் ஜென்ஸர் ஜிவல் சிங்
செல்வன். ஜோஷ்வா பால் பாண்டியராஜ்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
செல்வன். ஜாண்ராஜ் ராஜவேல்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்
செல்வன். அட்ரியல் கேமுவேல் தாசையா

சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. சாரா சவிதா சந்தோஷ்
சகோதரி. மரியம் பாக்கியசெல்வி
சகோதரி. ஆஸ்லி முத்தையா
சகோதரி. ஷீபா ஜிவல்சிங்
சகோதரி. கீதா ஜெயக்குமார்

சகோ. அருள்மணி
சகோ. சுனில் சுந்தர்ராஜ்
சகோ. ஜெயக்குமார்
சகோ. பாலகிருஷ்ணன்
சகோ. சாமுவேல்
சகோ. ஜினு
சகோ. வினிஷ்
சகோ. ஜாண் மில்லர்
சகோ. ஜாண்போஸ்கோ
சகோ. இயேசுரெத்தினம்
சகோ. ஜெஸ்லின் வில்ஸன்
சகோ. முத்தையா
சகோ. ராஜா ரவிச்சந்திரன்
சகோ. லாசர் ராஜமணி
சகோ. டேவிட் பாஸ்கரன்
சகோ. பால் டேனியேல்
சகோ. ராஜா

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான
வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

திருமதி & திரு. ஆசீர்வாதம்
திருமதி & திரு. லாசர் ராஜமணி
திருமதி & திரு. ஜெயசீலன்
திருமதி & திரு. சுகுமார்
திருமதி & திரு. ஜஸ்டஸ் விஜில் குமார்
திருமதி & திரு. சத்தியநாதன்

**சபையின் செயற்குழு சார்பாக இனிய பிறந்த நாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துக்கள்**

# 2019 மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/03/2019 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. சுகுமார் |
| 10/03/2019 | சகோ. தாமஸ் | சகோ. அசோக்குமார் |
| 17/03/2019 | சகோ. ஜினு | சகோ. கிறிஸ்டோபர் |
| 24/03/2019 | சகோ. பிரசாத் | சகோ. சாமுவேல் தாசையா |
| 31/03/2019 | சகோ. அற்புதராஜ் | சகோ. ஜெபராஜ் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/03/2019 | Dr. சாமுவேல் சுதாகர் My Daily Strength Ministries(Chennai) | |
| 08/03/2019 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. பால் ஜெகநாதன் |
| 15/03/2019 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 22/03/2019 | சகோ. எபிநேசர் | சகோ. ஐசக்துரை |
| 29/03/2019 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ. ஜெயசேகர் |

**சாம்பல் புதன் ஆராதனை**
06/03/2019 (இடம் : ஜெப வீடு ஃபாஹீல் ) நேரம் மாலை 6:30முதல் 8:30 வரை

**முழு இரவு ஜெபம்**
14/03/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(நேரம் இரவு 10:00 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை)

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
25/03/2019 இடம் – ஜெப வீடு பாஹீல், நேரம் 6:30
(வேத வினா பகுதி எஸ்தர்–புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் )
(Sponsor சகோதரி டாஃப்னி அவர்களின் குடும்பம்)

**29/03/2019 வாலிப ஐக்கிய கூடுகை**
நேரம் 6:30 வழ 8:30(இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )
(வேத வினா பகுதி ரோமர் புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் )

# மிஷனெரி – செய்தி

## ஜாண் ஹோல்ம்ஸ் (1866–1934)

இங்கிலாந்து 1877–ம் ஆண்டு நிரம்பிய ஜாண் ஹோல்ம்ஸ் தனது சிறிய கிராமமான ஹார்பர்டோன் போர்டுவிலிருந்து தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக, தனது மாமாவின் வீட்டிற்குச் சென்று வர்ணம் பூசும் பணியை மேற்கொள்ளப் பயணமானார். அவரது பக்தி மிகுந்த தாய் அவருக்காக ஒரு பெட்டியை ஆயத்தப்படுத்தி, அதில் அவரது துணிமணிகள், வேதாகமம், ஞானப்பாட்டு புத்தகம் மற்றும் சிறிய பணப்பையையும் வைத்ததுடன் பெட்டியின் மூடியில் ராபர்ட் மொபட் என்ற ஆப்பிரிக்கா தேசத்து மிஷனெரியின் படத்தையும் ஒட்டி அனுப்பி வைத்தார். தனது மாமா வசிக்கும் பகுதியான பரன்ட் என்ற இடத்திற்கு பேருந்தில் பயணம் செய்து வந்து வீடு சேர்ந்தார். அன்று இரவு தூங்கும்முன் தனது பெட்டியைத் திறந்து பார்த்தபோது தனது அன்புத் தாய் தனக்காக அழகாக அடுக்கி வைத்த பொருட்களைப் பார்த்து மகிழ்ந்த அவர் பெட்டியின் மூடியில் இருந்த ராபர்ட் மொபட்டின் படம் அவரைச் சிந்திக்க வைத்தது.

ஞாயிறு வேதாகமப் பள்ளியில் அவர் கற்ற மிஷனெரி மொபட்டின் வாழ்வு அவரது மிஷனெரி மொபட்டின் வாழ்வு, அவரது மிஷனெரி பணி கண்முன் தோன்ற தானம் ஆப்பிரிக்கா தேசத்தில் மிஷனெரியாகப் பணிபுரிவது போன்ற கனவுகளுடன் அன்று இரவு தூங்கினார். இரவு படுக்கைக்கு போகுமுன் வேதத்தை வாசித்து தனது பெட்டியில் வைக்கும் போது மொபட்டின் படத்தைப் பார்த்து நானும் ஆப்பிரிக்காவுக்கு மிஷனெரியாக செல்வேன் என்று அர்ப்பணித்தார்.

1886–ம் ஆண்டு பிளைமாவ்த் என்ற இடத்திலுள்ள வெஸ்டர்ன் கல்லூரியில் சேர்ந்து வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார். அந்த கல்லூரியில் படிக்கும்போது இந்தியா, சீனா பகுதியில் பணிபுரியும் மிஷனெரிகளைப் பற்றியும் அறிந்தார். லண்டன் மிஷனெரி ஸ்தாபனத்தில் இணைந்து ஆஸ்திரேலியாவுக்கு கப்பலில் பயணமானார். நாமாவ் என்ற மக்களிடத்தின் மத்தியில் ஊழியம் செய்தார். அந்த மக்களின் தலைவனால் தரப்பட்ட ஒரு குடிசையில் வாழ ஆரம்பித்தார். ஜாண் அங்குள்ள மக்களிடம் நட்புடன் பழகினார்.

முதலில் ஜாண் ஒரு சிறிய படகை அங்கு கிடைத்த மரப்பலகையினால் செய்து நன்றாக துடுப்பு போட்டுப் படகை செலுத்தும் 12 வாலிய பையன்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அந்த படகின் மூலம் ஒவ்வொரு கிராமமாக சந்திக்கச் சென்றார். ஒரு கிராமத்திற்குச் சென்றபோது அங்கு நடந்த விழாவில் இறந்த உடல்களைச் சுற்றி பெண்களின் நடனத்தையும் கொட்டு முரசுகளின் சத்தத்தின் மத்தியில் மனித உடல்களைச் சமைத்து ஆரவாரத்துடன் உண்ட அந்த மக்களின் முகத்தில் இருந்த

கொடூரத்தன்மையும் மறக்கமுடியவில்லை.இப்படிப்பட்ட நரமாமிசப் பட்சிணிகளை நான் எப்படி நண்பனாக்கி நற்செய்தியைச் சொல்ல முடியும்? என்று வியந்தார்.

முதலில் அவர்களது மொழியைக் கற்கவேண்டும் என்று அவர்கள் ஒலி எழுப்பும்போது அதே சத்தத்தை பென்சிலால் எழுதிக் கொள்வார். ஜாணிடம் அதிகக் காகிதங்கள் இல்லாததால் தனது வெள்ளைத் தொப்பி, வெள்ளை அரைக்கால் சட்டையில் கூட எழுதி வைத்திருந்தார். அவர்கள் பேசுவதுபோல பேசவும் ஆரம்பித்தார், வெள்ளை மனிதன் நமது மொழி பேசுகிறார் வந்து கேளுங்கள் என்று இவரது குழுவிலிருந்த பையன்கள் எல்லா இடத்திலும் அறிவித்தனர். அவரிடம் கத்தியோ, துப்பாக்கியோ வேறு எந்த ஆயுதமோ இல்லை, படிப்பதற்கு ஒரு புத்தகமும் நதியின் தண்ணீரின் ஆழம் எவ்வளவு என்று அறிய ஒரு கோலும் மட்டுமே உள்ளது என்று அறிந்த மக்களும் ஆவலுடன் வந்து நற்செய்தியைக் கேட்டனர்.

1902–ம் ஆண்டு இங்கிலாந்து திரும்பிய ஜாண் திருமணம் செய்துகொண்டு தனது மனைவியுடன் திரும்பி வந்து நியூகினியா பகுதியில் யுரிகா என்ற கடற்கரைப் பகுதியில் ஒரு சிறிய குடிசையில் வாழ்ந்து மிஷனெரிப் பணியைத் தொடர்ந்தார். மக்களிடையே ஏற்பட்ட சண்டைகளால் பல மனிதர்கள் கொல்லப்பட்டனர், பல கிராமங்கள் பாழாயின. எலும்புகளால் தெருக்கள் நிறைந்தன. இவர்களது மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட இந்த மக்களுக்கு கல்வி ஞானம் தேவை என்று உணர்ந்த ஜாண் சிறு பள்ளி அமைத்து பாடங்களை சொல்லிக் கொடுத்தார். வீடு கட்டிக்கொடுத்து அதில் வாழக் கற்றுக்கொடுத்தார். தென்னை மரம் நடுதல், பாய் முடைதல், நெய்தல் போன்றவற்றையும் சொல்லிக்கொடுத்தார். தினமும் காலை ஆறு மணிக்கு தனது வீட்டின் வாசலிருந்து விசில் சப்தம் எழுப்பி மக்களை வரவழைப்பார். காலை ஜெபத்திற்ககுப் பின் குழுக்களாகப் பிரித்து வேலை கொடுப்பார். இப்படி வேலை செய்வதின் பயனையும் உணர்த்தினார்.

அவர்களது மூடப்பழக்க வழக்கத்தினின்று விடுவிக்க அவர்களை வேலைகளில் ஈடுபடுத்தினார். யூரிகா என்ற இடத்தில் பள்ளிக்கூடம், சிறு தொழிற்கூடம், ஆலயம் நிறுவப்பட்டு திறம்படச் செயல்பட்டது. இவை மட்டுமல்லாமல் தனது சிறிய படகில் வெகுதூர பயணம் மேற்கொண்டு பல தூரத்துக் கிராமங்களைச் சந்தித்தார். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு ஆசிரியர்களை அனுப்பி அங்கு சிறு பிள்ளைகளுக்கு பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதற்கும் ஆலயங்களை நடத்துவதற்கும் நியமித்தார். படகுக் குழுவில் இருந்த வாலிபர்கள் ஜாணை தந்தை, எஜமான், முதியவர் என்று ஹோமு என்றும் அன்பாக அழைத்தனர். குழுவுடன் பயணம் செய்யும்போது வெள்ளை ஆடை அணிந்து வெள்ளை தொப்பியுடன் காணப்படுவார். கையில் வேதாகமம் எப்போதும் வைத்திருப்பார். ஜெபத்தின் வல்லமையைச் சொல்லிக் கொடுப்பார். கடலில் பயணம் செய்யும்போதும், புயல்

( தொடர்ச்சி 16 ஆம் பக்கம்)

## 2019 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

1. யார் ஜெபம் பண்ணும் போது கர்த்தருடைய மகிமை தேவாலயத்தை நிரப்பிற்று?
2. யாருடைய கண் பூமியெங்கும் உலாவி கொண்டிருக்கிறது?
3. மரித்தபின் கனம் பண்ணபட்டவன் யார்?
4. மரிக்கிறதற்கு முன்னே தனக்கு சொந்த கல்லறை உண்டாக்கி வைத்த ராஜா யார்?
5. மகா வீரனான லட்சத்திருபதனாயிரம் பேரை ஒரே நாளில் கொன்று போட்டவன் யார்?
6. மரித்தபின் தன் வீட்டிலே அடக்கம்பட்டபட்ட ராஜா யார்?
7. கர்த்தடைய ஆலயத்தில் தூப பீடத்தின் முன் வைத்து நெற்றியில் குஷ்ரோகம் பிடித்த ராஜா யார்?
8.வெங்கல பிரசங்க பீடம் செய்த ராஜா யார்?
9. கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் என்று வேண்டிக் கொண்டவன் யார்?
10. தன் மனக் துன்மார்க்கமாய் நடக்க அவனுக்கு ஆலோசனைகாரியாய் இருந்த தாய் யார்?
11. லட்சம் பராக்கிரமசாலிகளை 100 தாளந்து வெள்ளி கொடுத்து கூலிக்கு அமர்த்தினவன் யார்?
12. முன்னூறு ரதங்கள் உடையவன் யார் ?
13. எரிசலேமில் கோபுரங்களை கட்டினவன் யார்
14. தேவன் அவனை கைவிட்டார் அவன் யார்?
15. எங்கள் தேவனே அவர்களை நீர் நியாயம் தீர்க்கமாட்டீரோ என்று வேண்டிக் கொணடவர் யார் ?

விடைகளை வருகின்ற 20-03-2019 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps மூலமும் Seithi Malar ATC குருப்பில் அனுப்பவும் சூ 66015503) விடைகளை வேதா கமத்தில் 2.நாளாகமம் 6,7,14,16,22,25,26,28,32,33. ஆகிய அதிகாரங்களில் இருந்து பதிலைத் தேடுங்கள் ).

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

**தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; - -**

**மத்தேயு 7:7**

## 2019 பிப்ரவரி  மாத வேத வினாவுக்கு பதில்

1. பவுல் (ரோமர் 12:12) 2. ஆபிரகாம் (ரோமர் 4:21)

3. இயேசு கிறிஸ்து (ரோமர் )

4. அப் ..பவுல் (ரோமர் 12:10)

5. (ரோமர் 8:15)

6. பெர்சிபாள் (ரோமர் 16:12)

7. ரோமாபுரி சபை (ரோமர் 1:8) 8. பவுல் (ரோமர் 12:18)

9. (ரோமர் 12:1) 10. (ரோமர் 1:24)

11.(ரோமர் 1:28)

12. (ரோமர் 14:8) 13. (ரோமர் 12:9)

14. (ரோமர் 10:15) 15. பவுல் (ரோமர் 1:9)

## 2019 பிப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்

Sis. பத்மினி வர்கீஸ்

Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்

Sis. லதா கிறிஸ்டோபர்

Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்

Sis. செலின் டேவிட் ஜெயகுமார்

Sis. ஜோனா அசோக்குமார்

**கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. ( 2 கொரி 3:17)**

**தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.**

**ரோமர் 14:17**

( 13 ஆம் பக்க தொடர்ச்சி )
அலைக்கழிக்கும்போதும், ஜாண் ஜெபித்து வெற்றி காணுவதைக் கண்ட குழுவிலிருந்த வாலிப பையன்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்தனர்.

1912–ம் ஆண்டு 250 பேர் உட்காரும் அளவு ஒரு பள்ளியும், ஒரு சிறிய ஆலயமும் கட்டப்பட்டது. 5000 தென்னை மரங்கள் நடப்பட்டன. உணவிற்கான எல்லா கொருட்களையும் விளைவிக்கும் ஒரு பெரிய தோட்டத்தையும் உருவாக்கினார். படிக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே ஜாண் வேதத்தைத் தந்ததால் படிப்பதற்காக அவரது பள்ளியில் அதிக மாணவர்கள் வந்து சேர்ந்தனர். குழுக்கள் மத்தியில் சண்டைகள், கொடூரமான கொலைகள் மறைய ஆரம்பித்தன. ஹோமுவின் பெயர் சமாதானத்தின் பெயர் என்று மக்கள் அழைத்தனர்.

27 வருடம் நாமாவ் மக்கள் மத்தியில் பணிபுரிந்த ஜாண் ஹோல்ம்ஸ் சுகவீனப்பட்டு 1919–ம் ஆண்டு இங்கிலாந்து திரும்பினார். நான் இங்கிலாந்திற்குப்போய் இன்னும் அநேக மிஷனெரிகளை உங்களுக்கு அனுப்புவேன் அவர்கள் வந்து உங்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி அறிவிப்பார்கள் என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார். அவருக்கு அன்புடன் பிரியா விடை கொடுத்த நாமாவ் மக்களும் தலைவரும் நீர் எங்களது நண்பர், உமது சமாதான வார்த்தையில் நாங்கள் சண்டையிடுவதை விட்டுவிட்டோம், உமது வானளாவிய எண்ணங்களும் வார்த்தைகளும் எங்களது உலகத்தையே தலைகீழாக மாற்றிவிட்டது என்றனர். மேற்குப் பாப்புவா பகுதியின் நாமாவ் மக்களுக்கு முதலில் நற்செய்தியை எடுத்துச் சென்றவர் ஒரு வர்ணம் பூசும் சாதாரண தொழிலாளி ஜாண் ஹோல்ம்ஸ் என்று இன்றும் மக்கள் மத்தியில் நினைவு கூறப்படுகிறார். கடலில் பயணம் செய்யும்போதும், புயல் அலைக்கழிக்கும்போதும், ஜாண் ஜெபித்து வெற்றிக் கண்டார்.

கர்த்தரின் பணியில்
அன்பு சகோதரன்
S.சுகுமாரன்

## ஜெயம் தரும் ஜெபம்

1. இயேசு சொன்னார் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று.!

2. ஜெபம் என்பது ஒரு ப(ா)லம் இந்த பாலம்தான் மனிதனை தேவனோடு இணைக்கிறது! அநேகர் தேவைகளுக்காகவே தேவனை தேடுகிறார்கள் இனவிருத்திக்காக கரைக்கு வரும் கடல் ஆமையை போல !

3. வாழ்க்கையில் ஜெய ஸ்தம்பம் நாட்ட வேண்டுமானால் ஜெபம் எனும் அஸ்திபாரம் ஆழமாய் போடப்படவேண்டும் , இதில் விரிசல் விழும் போது ஆவிக்குறிய மாளிகை ஆட்டம் கண்டு (க)விழும்

4. ஜெபம் எனும் அஸ்திபாரத்தில் உருவாக்கப்பட்ட ஆசீர்வாதங்கள்தான் நிலைக்கும், மற்றவை மவுலிவாக்கத்தில் விழுந்த மாடி கட்டிடம் போல பொல பொல வென்று இடிந்து போகும் !.

உண்மையான ஊழியன் "மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்"" (எபே. 6:8). ரோட்டின் ஓரம் ஒரு குடையின் கீழ் செருப்பு தைத்துக் கொண்டு போகிறவர்கள், வருகிறவர்களின் ஷுக்களை பாலிஷ் செய்து கொண்டிருந்தான் ஒரு சிறுவன். தகப்பன் தொழிலை இளமையிலேயே கற்றுக் கொண்டது நல்லதாய் தோன்றியது. அவர் இறந்த பிறகு அவனது தாயை கவனிக்க அது கை கொடுத்தது. அச்சிறுவன் காசுக்காக கடமையே என தன் வேலையை செய்யமாட்டான். யாரோ ஒருவர் பாலிஷ் போட தங்கள் காலணியை அவன் முன் நீட்டியதும் நிமிர்ந்து பார்த்து சிரித்த முகத்துடன், சிறப்பாய் நேர்த்தியாய் அதை செய்து முடிப்பான். எப்போதும் வழக்கமாய் வரும் ஒருவர் ஒரு நாள் அவனிடம் மிகவும் சிரத்தை எடுத்து, கவனமாய் வேலை செய்கிறாயே இதே வேலையை செய்யும் மற்றவர்களிடம் இல்லாத ஏதோ ஒன்று உன்னிடம் காணப்படுகிறதே அது என்ன? என்று கேட்டார். சிறுவன் மகிழ்ச்சியோடு ஐயா நான் ஒரு கிறிஸ்தவன். இயேசு கிறிஸ்துவின் குணநலன்களை என் வாழ்விலும் செயல்படுத்த பிரயாசப்படுபவன், அதோடு ஒவ்வொருவருடைய காலணிகளை நான் பழுது பார்க்கும் போதும் இயேசு ராஜா என்னிடம் வந்து என் காலணிகளுக்கு பாலிஷ் போடு என்று சொன்னால் நான் எப்படி செய்து கொடுப்பேனோ அப்படித்தான் உங்கள் ஒவ்வொருவருக்கும் செய்கிறேன் என்று கூறினான். அந்த நபர் இவனது வார்த்தையின் மூலம் கிறிஸ்துவை குறித்து அறிந்து வேதத்தை வாசித்து கர்த்தரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான். மனுஷருக்கெல்லாம் ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல் மனதோடே ஊழியஞ் செய்யுங்கள் என்று அப். பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்கு ஆலோசனையாய் சொல்கிறார். எபேசியர் ஆறாம் அதிகாரத்திலே பிள்ளைகளுக்கு, பெற்றோருக்கு, மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்று நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள் என்று கூறுகிறார்.

பிரியமானவர்களே! நாம் எந்த தொழில்செய்தாலும் எந்த வேலை செய்தாலும் நமக்கு மேலுள்ள அதிகாரிகளுக்காக, அரசாங்கத்திற்காக செய்வோமானால் வேலைப்பளு அதிகமாகும் போது அவர்கள் மீது கோபமும் எரிச்சலும் வரும். அநேக நேரங்களில் அரசாங்க வேலையிலும் சுய லாபத்தை தேடுகிறவர்களாய் இருப்போம். ஆனால் வேதம் கூறுகிற இந்த ஆலோசனையை நமக்குரியதாக்கிக் கொண்டு ஒரு நாளில் நாம் செய்யும் எந்த வேலையையும் நான் இதை கர்த்தருக்கென்று செய்கிறேன். அவர் இதை காண்கிறார் என்ற சிந்தையோடு செய்வோமானால் அந்த வேலையில் உண்மை, நேர்மை, நேர்த்தி, சிறப்பு யாவும் நாமறியாமலேயே வந்து விடும். கிறிஸ்து நம் மூலம் அந்த அலுவலகத்தில் மகிமைப்படுவார். இப்படி உத்தம கிறிஸ்தவர்களாக வாழ நம்மை

அர்ப்பணிப்போம்

# வேத புழு

ஸ்பர்ஜன் என்னும் புகழ் பெற்ற பிரசங்கியார் ஒருமுறை கிறிஸ்தவ வீடு ஒன்றிக்கு சென்றிருந்தார். குடும்பத்தினரோடு பல விஷயங்களை பேசிவிட்டு, தன் பையில் வேதாகமம் இருந்தும் அந்த வீட்டிலிருந்து வேதாகமத்தை கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார். அவர்களோ வேதத்தை படிக்கும் பழக்கமே இல்லாத கிறிஸ்தவர்கள். குடும்ப ஜெபமும் இல்லாத கிறிஸ்தவர்கள். ஆகவே சுமார் 20 நிமிடம் கழித்து ஒரு மூலையிலிருந்து வேதத்தை தேடி எடுத்து, தூசி தட்டி பிரசங்கியார் கையில் கொடுத்து, பாருங்கள்! வேலைக்காரன் எங்கேயோ போட்டிருக்கிறான் என்று வேலைக்காரன் மேல் குற்றம் சாட்டினார்கள். ஸ்பர்ஜன் அந்த வேத புத்தகத்தை வாங்கிய பொழுது, அதில் நாலைந்து துவாரங்கள் இருப்பதை கவனித்தார். அநேக ஆண்டுகளாக அவ்வேதத்தை உபயோகிக்காததால் பூச்சிகள் துளைத்துள்ளன என்று அறிந்து கொண்டார். இறுதியில் அவர் ஜெபிக்கும் போது, ஆண்டவரே! வேதத்தை முதல் அட்டையிலிருந்து கடைசி அட்டை வரை துளைத்துக் கொண்டு போகவல்ல ஒரு பூச்சியாக, புழுவாக என்னை மாற்றும், எங்களை மாற்றும் என ஜெபித்தார். அக்குடும்பத்தார் தங்கள் தவறை உணர்ந்தனர். கிறிஸ்தவர்களாகிய நம்மில் அநேகர் வேதத்தை ஆராதனைக்கு மட்டுமே எடுத்துச் செல்கிறோம். ஒரு சிலர் சங்கீதத்தையும் நீதிமொழிகளையும் மாத்திரமே வாசிக்கிறோம். "என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன்: அவைகளை அந்நிய காரிமாகவே எண்ணினார்கள்"" (ஓசி. 8:12) என்று தேவன் நம்மைக் குறித்து சொல்லாதபடி,

வேதத்தை தினமும் வாசித்து அப்பியாசிக்கப் பழக வேண்டும். தேவன் நமக்கென்று எழுதிக் கொடுத்துள்ள மகத்துவமான காரியங்களை நாம் வாசித்து அவற்றை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அவற்றை யாருக்கோ தேவன் எழுதியிருக்கிறார் என்று அந்நிய காரியமாக எண்ணக் கூடாது. நாம் முழு வேதத்தையும் வாசித்து தியானிப்போமானால் இடறலற்ற சமாதான மான ஒரு வாழ்வை வாழ முடியும். காரணம் கிறிஸ்தவ வட்டாரத்தில் அநேக துர்உபதேசங்களும், வேதத்தில் சொல்லப்பட்டிராத பல புதிய முறைகளும் எங்கும் பரவி படர்ந்து வருகின்றன. கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும் விதமாக அவைகள் எங்கும் வலுவாய் தொனிக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட நாட்களிலே நாம் முழு வேதத்தையும் தியானித்து பெரோயா பட்டணத்தாரை போல காரியங்கள் அப்படி இருக்கிறதா! என வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து நற்குண சாலிகளாக நாம் மாறவேண்டியது மிகவும் அவசியம்.

பிரியமானவர்களே! ஒவ்வொரு நாளும் வேதம் நமக்கு ஆத்மீக ஆகாரமாக மாறுமென்றால், உலகிலுள்ள அனைத்து சோதனைகளிலும் நாம் ஜெயமெடுக்க முடியும். உலகமோ, மாமிசமோ, பிசாசோ எனக்கு எதிராய் நிற்பவன் யார்? என நாம் தைரிய மாய் சொல்ல முடியும். எப்படிப்பட்ட பிரச்சனைகளோ, வேதனைகளோ, தோல்விகளோ, துன்பங்களோ எது வந்தாலும் வேதம் நமக்கு வழிகாட்டியாக மாறும். ஒவ்வொரு நாளும் வேதத்தை வாசித்து வேத புத்தகத்தின் புழுவாக மாறி நம்மை அர்ப்பணிப்போம். வேதத்தின் இரகசியங்களை தேவன் நமக்கு கற்றுத் தருவார். "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு: அவர்களுக்கு இடறலில்லை"" (சங். 119:165). ஆகவே இடறலில்லா வாழ்க்கைக்கும், சமாதானமான வாழ்விற்கும் வேதம் இன்றியமையாததுமாயிருக்கிறது.

ஆமென்.

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு


















உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் - சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர் – சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் -

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only